**நல்லூரில் சகாய விற்பனை**

நல்லூர் கந்தசாமி கோவில் முன் வீதியில் அமைந்துள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக்காட்சிசாலையில் மில்க்வைற் தயாரிப்புக்கள் யாவும் சகாய விற்பனையுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படும். மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகள் சேகரித்து வைத்திருப்போர் அங்கு எமது விளம்பர காட்சிச்சாலையில் கொடுத்து பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மில்க்வைற்**
**யாழ்ப்பாணம்.**

விலை: சதம 75

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 32 ஷவ்வா 15 இதழ் 183
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 16-8-1981

**மலிவு விற்பனை**
எம்மிடம்
நல்ல இன முந்திரிகை
கன்றுகளும் நல்ல இன
தென்னங்கன்றுகளும்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவும்.
**அண்ணா பாம்**
புகையிரத வீதி,
இணுவில்.

# வன்முறைச் சம்பவங்கள் கட்டுப்பாட்டுக்குள்

## இராணுவ தொண்டர்களுக்கு மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

இராணுவ தொண்டர்களை உடனடியாக அவர்களது தலைமைக் காரியாலயத்திற்கு வருமாறு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னர் விடுக்கப்பட்ட அழைப்பின் பேரில் இதுவரை சேவைக்குவராத இராணுவத்

[6-ம் பக்கம் பார்க்க]

## கொட்டாஞ்சேனை, கெக்கிராவை

### குருநாகலில் சிறு சம்பவங்கள்

(கொழும்பு)

பல்வேறு இடங்களிலும் நடைபெற்றுவந்த தீவைப்பு, கொள்ளை, வன்செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளபோதிலும் ஆங்காங்கே சிறு அசம்பாவிதங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு-கொட்டாஞ்சேனையில் வீடொன்றின்மீது பெட்ரோல் குண்டு வீசப்பட்டபோதிலும் பாரதூரமான விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிகிறது.

கெக்கிராவை, குருநாகல் எகலியகொட, காவத்தை ஆகிய இடங்களிலும் சிறு சம்பவங்கள் நடைபெற்றுள்ளது.

**குருநாகலில் இருவர் பலி!**

குருநாகலில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இரு தமிழர்களும் காவத்தையில் ஒருவரும் பலியாகினர் எனத் தெரிகிறது.

நிவித்திகல, பெல்மதுளை, குருவிட்ட ஆகிய இடங்களில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையடிக்கப்பட்டதுடன் தீயிடப்பட்டும் உள்ளன.

எகலியகொடவிலிருந்து தமிழர்கள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன.

[ம-இ]

அண்மையில் கிழக்கிலங்கையில் இடம்பெற்ற கலவரத்தின் போது தீக்கிரையாக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில் காணப்படும் பாடசாலை ஒன்றின் தோற்றம்.

## யாழ். மாவட்டத்தில்

## இராணுவ ரோந்து நடவடிக்கை தீவிரம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் ராணுவத்தினரின் ரோந்து சுற்றும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

திடீர் திடீரென சிறு கிராமங்களில் தேடுதல் வேட்டையிலும் இறங்கியுள்ளனர். சில இடங்களில் இவர்களுடன் பொலிசாரும் செல்கின்றனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

## வவுனியாவில் வன்செயல் எதுவும் இல்லை!

[வவுனியா]

வவுனியாவில் இனரீதியிலான சம்பவம் எதுவும் ஏற்படவில்லை. பொதுமக்களுக்கோ, தனியார் சொத்துக்களுக்கோ சேதம் எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. வவுனியாவில் பூரண அமைதி நிலவுகின்றது.

வவுனியா பொலிஸ் பகுதியின் உயர் அதிகாரி மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

வவுனியாவில் இனரீதியிலான சம்பவம் நடைபெற்றுள்ளதாக ஒரு தமிழ்த் தினசரியில் [ஈழநாடு அல்ல] செய்தி வெளிவந்திருப்பதாகவும் இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இம்மாதிரி செய்திகள் மக்கள் மத்தியில் கிலியை ஏற்படுத்தவும், வன்முறைகளைத் தூண்டவும் உதவும் என்றார் அவ்வதிகாரி. வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் பொலிசார் ராணுவத்தினருடன் இணைந்து பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருமலையில் இராணுவத்தளம் அமைக்கும் நோக்கம் அமெரிக்காவுக்கு இல்லை

### கண்டியில் தூதுவர் விளக்கம்

[கொழும்பு]

திருகோணமலையில் இராணுவத்தளம் அமைக்கும் நோக்கம் என்றுமே அமெரிக்காவுக்குக் கிடையாது. இது குறித்துக் கூறப்பட்டுவரும் கற்பனைக் கதைகளில் எதுவித அர்த்தமும் இல்லை.

இவ்வாறு இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. டொனல்ட் ருசெய்ன்ட் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற அமெரிக்க நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றுகையிலேயே திரு. ருசெய்ன்ட் மேற்கண்டவாறு கூறினார்.

திருகோணமலையில் இராணுவத்தளம் அமைப்பது குறித்து அமெரிக்கா எவருடனும் எந்த நாட்டுடனும் என்றுமே பேச்சுவார்த்தை நடத்தியது கிடையாதென்றும் திரு. ருசெய்ன்ட் கூறினார்.

நீண்ட நாட்களாக இந்த கற்பனைக் கதையைத்தாம் கேள்வியுற்றதாகவும் இது பற்றிய விளக்கத்தை இலங்கையின் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவின் முன்னிலையில் கூறுவதற்கு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்ததாகவும் இன்று அச்சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் திரு. ருசெய்ன்ட் தெரிவித்தார்.

இவ்விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தன இலங்கையி

[6ம் பக்கம்பார்க்க]

உங்கள் முதலீட்டிற்கு 27% வரை
வட்டி வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுக்கு
★ ஆயுள் காப்புறுதி இனம் ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் [பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்]

நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ ஸ்திரத்தன்மை

வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்

TFC
**த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,**
191, 249 சி, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்,
போன்: 7680

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பி. ஏ. தம்பி ஒழுங்கையில், பொன்னம்பல ஒழுங்கை சந்திக்கும் இடத்தருகே 2 பரப்பு 9½ குழி காணி (மின் வசதியுடைய வீட்டுடன்) விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் கோண்டாவில் உபதபாற்கந்தோர் அதிபருடன் தொடர்பு கொள்ளவும். (0592)

---

யாழ் மாநகரசபை எல்லைக்குள் தண்ணீர், மின்சாரம் ஆகிய சகலவசதிகளுடன் புது வீடு வளவு விற்பனைக்குஉண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். 185/1, இன்னர் லேன், கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். 0633

---

பலாலி றோட்டில் இருந்து கால் மைல் தூரத்தில் கரந்தன் நீர்வேலி றோட்டுக் கருகாமையில் 20 பரப்பு காணி ஆக 16 பரப்பு தோட்டக் காணியும் உடன் விற்பனைக்குள்ளது. ச. நாகலிங்கம், ஊரெழு கிழக்கு, சுன்னாகம். 0595

---

வட்டுக்கோட்டைச் சந்தியில் இரண்டரைப் பரப்புக் காணி-கட்டிடத்துடன் விற்கப்படும். யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்பாக. வெ. யோகீஸ்வரன், வட்டுக்கோட்டை. 0639

---

நல்லூர் சந்தைக்கு அண்மையில் சகல வசதிகளும் உள்ள ஐந்து அறைகள் கொண்ட காலியான வீட்டுடன் மூன்றரைப் பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 18, சப்பல்வீதி, யாழ்ப்பாணம். (0637)

---

விறகு 300 தூக்குவரையில் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. வைத்திலிங்கம் கொம்பனி மரக்காலை, மின்சாரநிலைய வீதி, பஸ்நிலையம் முன்பாக யாழ்ப்பாணம். 0641

---

ஒரு சோடி வண்டில் உழவு வேலை செய்யக்கூடிய, நல்லின இளம் எருதுமாடுகள் விற்பனைக்குண்டு. யாழ்ப்பாணம் 206, கஸ்தூரியார் வீதியில் உள்ள இல்லத்தில் பார்வையிடலாம். 0642

## தேவை

ஆனைக்கோட்டை மானிப்பாய், உடுவில் பகுதிகளில் வீடு கட்டுவதற்கேற்ற நல்ல சுற்றுமதிலுள்ள காணி தேவை. தொடர்பு: P. மீனாட்சிசுந்தரம், "சாந்தி இல்லம்" சங்கரத்தை வட்டுக்கோட்டை. 0607

---

வியாபார நிலையங்களின் கணக்குகள் அனுபவம் மிக்கவரால் நியாயமான கட்டணத்தில் எழுதிக் கொடுக்கப்படும். சுந்தரம்பிள்ளை "ஞானகிரி" திருவீதி, உரும்பராய். 0643

[illegible] காய்ந்த வேப்பம் விதை சில்லறையாகவும், தொகையாகவும் கொள்வனவு செய்யப்படும். மில்க்வைற் யாழ்ப்பாணம். 0630

---

பயிற்றப்பட்ட /பயிற்றப்படாத மருந்து கலவையாளர் உடனடியாகத் தேவை. பயிற்றப்படாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். வைத்தியர், மெடிக்கல் சென்றர் ஆனைக்கோட்டை. 0638

## தேவை

ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர் வயது 5[illegible], லண்டன் மட்ரிகுலேசன், தனிப்பட்டவர். வீடு, தென்னந்தோட்டம், மேற்பார்வையாளர் அல்லது வேறு தகுதியுள்ள தொழில்-நிலைமை ஆற்றவார்-ஆங்கில தமிழ் தட்டெழுத்தாளர். க. சபாரத்தினம் [illegible], தபால் அதிபர், அளவெட்டி. 0635

## சேவை

எமது மில்லில் கருவாட்டு உப்பு, கோழித்தீன் ஆகியவை சிறந்த முறையில் அரைத்துக் கொடுக்கப்படும். இறவுண் கிறைண்டிங் மில், சாடி போக்குச்சந்தி, கிளிநொச்சி. 0599

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் பயிற்சி 02-09-81 ஆரம்பமாகின்றது. Institute of Engineering [illegible] Technology 9, Stanley Road, Jaffna 0629

## தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டை இல. 620418430V கொழும்புத்துறை இந்துக்கல்லூரிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தி. நகுலேஸ்வரநாதன் 30/2 சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 0622

## சங்கானை

ப. நோ. கூ. சங்கம்

### பதவி வெற்றிடம்

பொதுமுகாமையாளர்

தரம் 11

விண்ணப்ப முடிவுத் திகதி: 31-08-81.

தேவையான விபரங்கள் விண்ணப்பப் படிவங்கள் முதலியனவற்றிற்கு "தலைவர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். (0634)

## மீண்டும் தெரிவு

(பண்டத்தரிப்பு)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட்டுக்கோட்டைக் கிளையின் தலைவராகப் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. பொ. கந்தசாமி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக ஆசிரியர் திரு. க. பரமலிங்கமும், பொருளாளராக ஆசிரியர் திரு. எஸ். தியாகராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

## ஜேர்மனியில் மரணமான இளைஞர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியைச் சேர்ந்த துரைராசா சர்வேஸ்வரன் (வயது 25) என்ற இளைஞர் ஜேர்மனியில் மாரடைப்பினால் மரணமானார்.

இவரது சடலம் சொந்த ஊரிற்குக் கொண்டுவரப்பட்டு அங்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்றது.

## மானிப்பாய்த் தொகுதி

# வீடமைப்புத் திட்டம் ஸ்தம்பித நிலையில்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் தேர்தல் தொகுதியில் சுயஉதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் வீடு கிடைக்கத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு உரியகாலத்தில் கட்டிடப் பொருட்கள் வழங்கப்படாமல் இருப்பதால் தங்கள் வீடுகளைத் தொடர்ந்து கட்டமுடியாது ஸ்தம்பித்த நிலையில் இருப்பதாகப் பலத்த புகார் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் தொகுதிகள் தோறும் சுயஉதவிவீடமைப்புத்திட்டத்தின் கீழ் 30 வீடுகள் அமைக்கும் திட்டப்பிரகாரம் கடந்த ஜூன் மாதத்தில் நாட்டின் பல்வேறு தொகுதிகளிலும் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மானிப்பாய் தேர்தல்தொகுதியில் இத்திட்டத்தின் வீடுகள் பெறுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்குக் கட்டுடை, இடிகுண்டு என்ற இடத்திலுள்ள வீடமைப்புத்திட்டப்பிரதேசத்தில் காணிகள் வழங்கப்பட்டன. முதலில் கிடைத்த கட்டடப்பொருட்களைக் கொண்டு அத்திபாரக்கட்டிடம் மட்டும் கட்டிமுடிக்கப்பட்டதாகவும், மேற்கொண்டு கட்டிட வேலைகளைத் தொடர்ந்துசெய்வதற்குத் தேவையான கொங்கிறீட் கற்கள், மணல், கல்லு, மரச்சிலாகைகள் போன்றவற்றை இதுவரை வழங்கவில்லையென்றும் புகார் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே ஒருசிலருக்கு வழங்கப்பட்ட கட்டிடப் பொருட்கள் மிகவும் தரம் குறைந்தவையாக இருப்பதாகவும் நீண்டகாலப்பாவனைக்கு அவை உதவாததாக இருப்பதாகவும் புகார் தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி கட்டுடை கிராமஅபிவிருத்திச் சங்கம் பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா, மானிப்பாய் தொகுதி எம். பி. திரு. வி. தர்மலிங்கம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்கஅதிபர் திரு. ஏ. மகாதேவா ஆகியோருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது. (அ)

## கார்கள் மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத்தெரு சந்தியில் இரு கார்கள் மோதிக்கொண்டதில் ஒரு கார் தடம்புரண்டது. இக்காரின் சாரதி சிறுகாயங்களுடன் தெய்வாதீனமாக உயிர் தப்பி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றைய காரின் முன்பக்கம் பலத்தசேதமடைந்துள்ளது.

## பிள்ளையார் ஆலய புனருத்தாரணம்

(புலோலி திருபரி)

வராத்துப்பளை பண்டாவத்தைப் பிள்ளையார் ஆலயம் புனருத்தாரணம்செய்யப்படவுள்ளது. பலவருடகாலமாகப் பழுதடைந்து இருக்கும் இவ்வாலயத்தைப் புனரமைப்பதற்காகத் திருப்பணிச்சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இச்சபையின் நிர்வாகிகள்: போஷகர்கள் எஸ். எம். கந்தவனம் எஸ். தர்மலிங்கம், தலைவர் எஸ். தர்மதுரை, உபதலைவர் என் சுப்பையா, செயலாளர் எஸ். புவனேந்திரன், உபசெயலாளர் ஏ. என், சுப்பிரமணியம், பொருளாளர் வீ. என் சந்திரசேகரம், பொதுத்தொடர்புத் தலைவர் ஏ என் எஸ் திருச்செல்வன், செயற்குழு உறுப்பினர்கள்: எஸ் வி செல்லத்துரை, ரீ. கிருஷ்ணபிள்ளை, வி மாணிக்கராசா, கே ஸ்ரீகாந்தன், வி பாலகிருஷ்ணன், என்- ஸ்ரீதரன், கு. குகேந்திரன்.

## இறைவணக்கமே துன்பங்கள் தீரவழி

(சுழிபுரம்)

"இறைவனின் அருள் ஒன்றே எமது வாழ்வின் இடரைப் போக்கக்கூடியது. ஆதலால் எமது துன்பம் துயர் யாவற்றையும் நீக்க இறைவனை வணங்கி இன்பமாக வாழ்வோம் நாம் எந்நேரமும் நெஞ்சில் வாயில் இறைநாமம் உச்சரிப்போமாகில் இறையருள் கிட்டும். உலகம் உய்ய நாட்டு நெருக்கடி குறைய நாம் இன்பமாக அமைதியாக வாழ பஜனை செய்வோம்.

இவ்வாறு பொன்னாலை வரதராஜப் பெருமாள் உற்சவகாலத் தொடர்பஜனையை ஆரம்பித்து வைத்துப்பேசிய திரு. வி. மயில்வாகனம் குறிப்பிட்டார்.

பொன்னாலை பொ. சிவகுருநாதன் தலைமையில் பஜனைக் கோஷ்டியொன்று தினமும் பஜனை நடத்திவருகின்றனர். ஆசிரியர் கா. சின்னத்துரை உட்பட மற்றும் பலர் பேசினர்.

## திருமண அழைப்பு

### S. பாலகிருஷ்ணன்— விஷயலக்ஷ்மி

திரு. சி. சிறீனிவாசன் M. A.
(முன்னாள் அதிபர், உரும்பராய் இந்துக்கல்லூரி,
கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) அவரது பாரியார்
திருமதி ஜானகி சிறீனிவாசனது
புதல்வன்
**திரு. சி. பாலகிருஷ்ணனதும்**
திரு. R. வைத்தியநாதனது மகள்
**செல்வி விஷயலக்ஷ்மியினதும்**
திருமணம்
நிகழும் ஆவணி மாதம் 19-ந் திகதி அன்று
காலை 9-30 மணிக்கும் 11 30 மணிக்கும் இடையில்
சேலம் 7, நம்பர்196, இராமகிருஷ்ண வீதியில்
அமைந்திருக்கும் கோதண்டராம கங்காரம்
ஞாபகார்த்த மண்டபத்தில்
நடைபெறும்.
உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்
ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.
சேலம் போன் நம். 2555 (0644)

## யாழ். நகரில் மலிவு விலையில் பொருட்கள்...

- ★ பேப்பர் வகைகள்
- ★ மின்சார பொருட்கள்
- ★ பாடசாலை உபகரணங்கள்
- ★ வீட்டுப் பாவனைப் பொருட்கள்

∴ நியூஸ் பிரின்ட் பேப்பர் ∴ பேங் பேப்பர்
(இறக்குமதி, உள்ளூர் செய்யப்பட்டது)
பேங் பேப்பர் கலர்
வைட் பிரின்டிங் (22 1/2x35) (20x30) (D/C)
TISSUE (ரிசு) (வெள்ளை பல வர்ணங்களில்)
GRAPE PAPER (பச்சை, சிகப்புடன்,
10 வர்ணங்களில்)
∴ பிறவுண்பேப்பர் ∴ டைப்பிங் பேப்பர்
கடித உறைகள் (பல அளவுகளில்
பிளாஸ்டிக் குறோசரி பேக்ஸ் & (WEDDING BAG)
Australian Clipsal Switches
அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட
கிளிப்சல் சுவிச்சுக்கள், சகலவிதமான லகேஜ்,
வெடிங் பைகள்
மின்சார அலங்காரப் பொருட்கள், மின்விசிறிகள்,
மின் அலங்காரப் பெண்டன்கள், இஸ்திரிப் பெட்டிகள்
டோர்ச் லைட்டுகள், பொக்கட் றேடியோக்கள்
கசெட் றேடியோக்கள்
இன்னும் பல பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட

**அம்பலவாணர் அன் சன்ஸ்**

தேசிய கடதாசிக் கூட்டுஸ்தாபனத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்- மின்சார இணைப்பு
ஒப்பந்தக்காரரும். விற்பனையாளரும்
196 கே. கே. எஸ் வீதி,
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் எதிரில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8291 தந்தி: 'வாணர்சன்ஸ்'
தலைமையகம்:
பேர்ள் லைட்ஸ
அம்பலவாணர் அன் சன்ஸ்
78, மலிபன் வீதி, கொழும்பு-11 போன்: 24821-28244
லெட்சுமி பவான்
97, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு-11

# கூட்டுறவுத் துறையில் நிலவும் ஊழல்கள்

**1980-ம்** ஆண்டு தென் கொரியாவில் 4992 சிவில் உத்தியோகத்தர்களும் 1819 நிர்வாக உத்தியோகத்தர்களும் ஊழல் சம்பந்தமாகவும் திறமையின்மை காரணமாகவும் வேலையிலிருந்து விலக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது இந் நடவடிக்கை மேலும் பல துறைகளுக்கும் விஸ்தரிக்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கே கீழ்மட்டத்தில் மாத்திரம் இது நிகழவில்லை. உயர் மட்டத்திலுள்ள மந்திரிமார்களும், உதவிமந்திரிமார்களும் கூட தங்கள் பதவிகளை இழக்க நேரிட்டது.

இலங்கையில் லஞ்சத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டங்கள் உள்ளன. இதற்காக தனி இலாகா ஒன்றும் உள்ளது. லஞ்சம் எடுப்பவரைப் பொறுத்தவரையில் பொதுமக்கள் அறிந்தவரையில் 'சின்னமீன்கள்' தான் பிடிபடுகின்றன பெரியவை எப்படி தப்பித்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து கொண்டுள்ளன.

### கூட்டுறவில்

ஊழலைப் பற்றி பேசும் பொழுது நாளாந்தம் தாங்கள் உறவு கொண்டாடும் கூட்டுறவு சங்கங்களின் நிலைகளைப்பற்றி பாரதூரமான கருத்துக்களை பாவனையாளர்கள் தெரிவிப்பது இயற்கையே. பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்து செல்கின்ற வேளையில் நிறை குறைப்பு முதலியன, வீட்டு பெண்களால் பொறுக்க முடியாத தொன்றாகும். சில சமயங்களில் கடமையாற்றும் கூட்டுறவு ஊழியர்களுக்கு 'பட்டை நாமங்கள்' சூட்டப்படுகின்றன. சில கூட்டுறவு நிலையங்கள் கறுப்பு சந்தைக்கு பொருட்களை விநியோகிக்கும் நிலையங்களாகவும் மாறுகின்றன. கூட்டுறவிலும் மற்றும் கொழும்பிலுள்ள அரசாங்க நிறுவனங்கள் மூலமும் இடம் பெற்றுவரும் ஊழல்களை தடுத்து நிறுத்துவதன்மூலம் அரசாங்கம் 'கறுப்புச் சந்தைக்கு' வெள்ளையடித்து விடலாம். ஆனால் இதனைத் தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுத்த போதிலும் இந்நடைமுறைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. இதனை சரியான முறையில் களைந்து பிழை செய்பவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும். இச்சந்தர்ப்பங்களில் அரசியல்வாதிகள் தலையிடுதல் கண்டிக்கப்படல் வேண்டியதொன்றாகும். கூட்டுறவு மந்திரி கடந்தகால அரசின்போது 290 கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள 22000 பேர்களிடம் இருந்து 720 கோடி ரூபாய் அறவிட வேண்டுமென ஓர் அறிக்கை சமர்ப்பித்திருந்தார். இவற்றில் 5லட்சம்மட்டுமே அறவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது மோசடி, களவு, ஊழல் முதலியவற்றில் ஈடுபட்டு பொதுப்பணத்தை சூறையாடுகின்ற எவருக்கும் அரசாங்கம் விமோசனம் அளிக்கக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் பதவியிலிருந்தும் உடன் விலக்கப்படல் வேண்டும்.

- எஸ். கே. ரி. -

நீதி அமைச்சர் தலைமையில் ஓர் சபை நியமிக்கப்பட்டு கூட்டுறவுத் துறையை துரிதப்படுத்துவதற்கு 5 புதிய உதவி ஆக்க ஆணையாளர்கள் நியமிக்கப்படல் வேண்டுமெனவும் கூட்டுறவில் நிகழும் ஊழல் முதலியன களையப்பட வேண்டுமெனவும் 1980ல் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது எவ்வளவு தூரத்திற்கு செயல்பட்டிருக்கின்றதென்பது தெரியவில்லை.

### யாழ். மாவட்டத்தில்

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரையில் இங்குள்ள சங்கங்களை மேற்பார்வை செய்வதற்குள்ள உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகின்றது. அல்லது குறைக்கப்பட்டு வருகிறதோ தெரியவில்லை. வட பகுதியில் கூட்டுறவு வளர்ச்சி அடைய வேண்டுமானால் சங்கங்களை மேற்பார்வை செய்வதற்கு போதிய உத்தியோகத்தர்களும் வசதிகளும் வேண்டும். இடமாற்றம் செய்த இடங்களுக்கு உடனுக்குடன் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும். அத்துடன் கூட்டுறவு இலாகாவும் ஆணையாளர்களும் எந்த விடயத்திலும் அசமந்தப் போக்கு கொண்டிருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்க நிர்வாகம் விடும் பிழைகளை உடனுக்குடன் கவனித்து நடவடிக்கை எடுக்க தயங்கக் கூடாது. இவற்றினை செய்தால் கூட்டுறவு நிர்வாகம் சரியாக நடந்துகொள்ள வழி பிறக்கும்.

## சனசமூகநிலைய பிரதிநிதிகள் மகாநாடு

[சாவகச்சேரி]

யாழ். மாவட்ட சனசமூக நிலையப் பிரதிநிதிகளின் மகாநாடு எதிர்வரும் 12ம் திகதி தலைவர் ப. வாரித்தம்பி தலைமையில் நடைபெறும்.

அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா எதிர்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோர் பங்குபற்றி உரையாற்றுவார்கள்

இக்கூட்டத்தில் உருவாகவிருக்கும் கிராமோதய பிரதேசசபைகளில் சனசமூக நிலையங்களின் பங்கு பற்றி ஆராயப்படும்.

சமூகத்தொண்டன் மூன்றாவது மலரும் வெளியிடப்படும்.

## விசேட கூட்டம்

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தின் விசேட பொதுக்கூட்டம நாளை முற்பகல் ஆரியகுளம் சன்மார்க்க சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சமாஜத் தலைவர் திரு. வே. ப. வாரித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் செயற்பாட்டின் கீழ் சனசமூக நிலையங்களின் நிலைபற்றியும், சனசமூக நிலையங்களின் வாரத்தை யாழ். மாவட்டத்தில் கொண்டாடுவதுபற்றியும் ஆராயப்படுமென்று தெரிவிக்கப் படுகின்றது. [இ]

# தகைமைகள் பெற்றிருந்தால் பதவி உயர்வு வழங்குக

## அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்க யாழ். கிளை வருடாந்தக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

பதவி உயர்வு வேளையில் எந்தவொரு உத்தியோகஸ்தரும் சிங்களத் தேர்ச்சியுடன் மற்றைய தகைமைகளும் பெற்றிருந்தால், அவர்களது பழைய முதுமுறை இலக்கம் பேணப்பட்டு பதவி உயர்வு வழங்கப்படவேண்டும்.

1930, 1945, 1960ம் ஆண்டுகளில் சமரச சம்பள நிலையிலிருந்த சேவையாளரினது தற்போதைய சம்பள விகிதத்திற்கு அஞ்சல் அதிபர் தொலைபேசி இயக்குநர்கள், தொலையச்சாளரின் சம்பள விகிதங்கள் உயர்த்தப்படல் வேண்டும்.

திருப்திகரமான தபால் தந்திச் சேவையை மக்களுக்கு அளிப்பதற்காக காலனித்துவ நடைமுறையைப் பின்பற்றாது அஞ்சலகங்களுக்கு நேரில் சென்று குறைகளையும் கஷ்டங்களையும் அவதானித்து விமோசனம் வழங்கல் வேண்டும்

இரவில் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரின் வேலைப்பளுவைக் குறைப்பதற்கும் மற்றும் தொலைபேசி இயக்குநர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதற்குமாக மேலதிக உத்தியோகஸ்தர்களை நியமித்தல்வேண்டும்.

சேவை நிபந்தனைகளில் மாற்றம் ஏற்படும் பொழுது விரும்பாத உத்தியோகஸ்தர்கள் முழு உரிமையுடன் இளைப்பாற அனுமதிக்கவேண்டும்.

தொலைபேசிக் கணக்குப்பகுதியிலுள்ள வேலைப்பளுவை ஈடு செய்வதற்கு மேலதிக பெண் தொலைபேசி இயக்குநர்களையும் உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும்.

# அண்ணல் வருகின்றான்

வேலன் வருகின்றான் - நல்ல
பாலன் வருகின்றான்
காலமெலாம் எங்கள் துயர்
கழுவ வருகின்றான் - அன்பு
தழுவ வருகின்றான்.

முருகன் வருகின்றான் - நல்ல
மதலவன் வருகின்றான்
சீட்ருடனே மண்ணில் வாழ்வு
சிறக்க வருகின்றான் - அருள்
சுரக்க வருகின்றான்.

அண்ணல் வருகின்றான் - நல்ல
மன்னன் வருகின்றான்
அன்புநெஞ்சில் கோவில்கொண்டு
இருக்க வருகின்றான் - வாழ்வு
சிறக்க வருகின்றான்.

—கல்வயல் அருள். வேலழகன்

# எமது மக்கள் நல்வாழ்வுக்கு புதிய செயல்திட்டம்

## திருவள்ளுவர் மகாசபைத் தலைவர்

[அரியாலை]

"எமக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்காகச் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயல்படும் நாம் எமது சமூக மக்களின் நல்வாழ்வுக்காகப் பல செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.''

''மத மாற்றத்தினால் தீண்டாமைப் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கையில் இந்தியாவில் வாழும் பெருமளவு ஒடுக்கப்பட்ட மக்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்கிறார்கள். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழும் நாம் இந்துசமயத்தில் இருந்து கொண்டே சாதிப் பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சிகள் செய்துவருகிறோம்.''

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 31வது வருடாந்த மகாநாட்டுக்குத் தலைமைவகித்த மகாசபைத் தலைவர் திரு. க. கிருஷ்ணராசா தமது உரையில் குறிப்பிட்டார்.

மீசாலை மகாத்மா நெசவு நிலைய மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டை திரு சி. வல்லிபுரம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். மகாசபைத்தலைவர் திரு க. கிருஷ்ணராசா மகாசபைக் கொடியை ஏற்றிவைத்தார்.

அமரர் போச யோனு அரங்கில் நடைபெற்ற மகாநாட்டில் திருவள்ளுவர் மகாசபையின் தென்மராட்சிக் கிளைச் செயலாளர் திரு இ. ஜெயராசா தொடக்கவுரை நிகழ்த்தினார்.

திரு க. கிருஷ்ணராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''மகாசபையின் முன்னோடிகளால் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சகாய நிதி உதவி மூலம் 30க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் கல்வி கற்கிறார்கள். எமது மகாசபையின் தென்மராட்சிக் கிளையினால் ஆரம்பிக்கப்பட்ட மரணச் சகாயநிதி மூலம் அப்பகுதி மக்கள் பெரும் நன்மை அடைந்து வருகிறார்கள். எமது இனத்தின் உயர்ச்சிக்காக உழைத்துவரும் நாம் இழந்த உரிமைகளை வென்றெடுப்பதற்காக இந்நாட்டில் செயல்படும் சகல சிறுபான்மைத் தமிழ் மக்களின் இயக்கங்களுடனும் கட்சி வேறுபாடின்றித் தோழமையோடு செயற்பட்டுவருகின்றோம்.

''சம போசனம், சம ஆசனம் என்பவற்றுக்காக எமது தலைவர் நீண்டகாலம் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தின் பயனை நாம் இன்று அனுபவிக்கிறோம். தமிழ் மக்களிடையே இருக்கும் சகல வர்க்க இனபேதங்களும் மறைந்து ஒழிய நாம் தொடர்ந்தும் முயற்சி செய்ய வேண்டும்.'' [க]

# நாளை நடைபெறும் ஆசிரியர் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் ஆசியப் பிரதிநிதியாக திரு. குர்ணைசிங் நாளை திங்கட்கிழமை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கும் ''தொழிற்சங்க நிர்வாகம்'' தொடர்பான கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கருத்தரங்கை சர்வதேச சுதந்திர ஆசிரியர் சங்க சம்மேளனமும், பிரட்ரிச் ஈபேர்ட் மன்றமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும இணைந்து நடாத்துகின்றன.

இக்கருத்தரங்கில் திரு. குர்ணைசிங, கல்வியமைச்சின் கணக்காளர் திரு இராஜ் சுப்பிரமணியம், பிரட்ரிக் ஈபேர்ட் மன்றப் பிரதிநிதி திரு ஸ்டீபன் ருபேட் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்து கொள்கிறார்கள்.

கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எம். பி. சி. சில்வா பிரதம விருந்தினராக் கலந்துகொண்டு இக்கருத்தரங்கை ஆரம்பித்துவைப்பார்

இக்கருத்தரங்கில் பல தொழிற்சங்கப் பிரமுகர்களும், கல்வியமைச்சு அதிகாரிகளும், கல்வித் திணைக்கள அதிகாரிகளும், தொழிற்திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளனர்.

இக்கருத்தரங்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் இ. த. ஆ. சங்கத் தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்க தலைமையில் நடைபெறும்.

இ த ஆ சங்கத்தின் பொதுச் செயலாளரான திரு. த. மகாசிவம் இக்கருத்தரங்கின் அமைப்புச் செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

இ த ஆ சங்கத்தின் தாய்ச் சங்க நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள உட்பட 35 நிர்வாகிகளுக்குத் தொழிற்சங்க நிர்வாகம் தொடர்பாக இக்கருத்தரங்கில் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. [மா]

## கூட்டுறவு தினவிழா

[துணுக்காய்]

சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவாளர் தின விழா எதிர்வரும் வியாழக்கிழமை துணுக்காயில் நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு, வவுனிக்குளம், துணுக்காய், முத்தையன்கட்டு, விசுவமடு ஆகிய பலநோக்கு கூட்டுறவு சங்கங்களும், முல்லைத்தீவு மீனவர் கூட்டுறவு சங்கம், கூட்டுறவு திணைக்களம், முல்லைத்தீவு மாவட்டதேசிய கூட்டுறவு சபை ஆகியன இணைந்து இவ்விழாவை கொண்டாடுகின்றன. இவ்விழாவிற்கு பிரதம அதிதிகளாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், மாவட்ட சபை தலைவர், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.

[6ம் பக்கம் பார்க்க]

## விவசாயப் பண்ணைகளைப் பார்த்தனர்

[உடுப்பிட்டி]

கண்டி தேசிய கத்தோலிக்க குருமடத்தைச் சேர்ந்த குருமாணவர்கள் அண்மையில் யாழ். மறைமாவட்டத்திற்கு விஜயம் செய்தபோது கிளிநொச்சி லோங் நிறுவனத்திற்கும் விஜயம்செய்து அங்குள்ள விவசாயப் பண்ணைகளைப் பார்வையிட்டனர்.



## இன்று நல்லூர்க் கந்தன்

## 12-ம் திருவிழா

ஆனு வமுதேயயில்
வேலரசே
ஞானு கரனே நவிலத்
தகுமோ
யானுகிய வென்னை
விழுங்கி வெறுந்
தானுய் நிலைநின்றது
தற்பரமே.

—கந்தரநுபூதி.

### குறிகாட்டுவானிலிருந்து தீவுப்பகுதிக்கு

## நிறுத்தப்பட்ட படகுச் சேவையை உடன் நடத்த ஏற்பாடு செய்க!

—பண்டிதர் இரத்தினம்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானிலிருந்து தீவுப்பகுதிக்கு நடைபெற்றுவந்த படகு சேவையை உடனடியாக மீண்டும் தொடக்குமாறு பிரதமமந்திரியை ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்டுள்ளார்.

குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கும் மற்றும் ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கும் மத்தியானத்தில் நடைபெற்றுவந்த படகு சேவை எதுவித காரணமுமின்றி நிற்பாட்டப்பட்டுள்ளதாகவும் பலகாலமாக வலியுறுத்திப் பெற்ற இச்சேவையை தொடர்ந்து நடத்துமாறும் தெரிவித்து திணைக்களத்துக்கு பணிக்குமாறு அத்தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 29-1-81ல் யாழ். கச்சேரியில் பிரதமர் நடத்திய விசேஷ மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் இச்சேவைகள் விஸ்தரிப்பு சம்பந்தமாக ஆராய்ந்து ஒரு லட்சம் ரூபா மேலதிகமாக வழங்க வேண்டுமென்று தாங்கள் கட்டளையிட்டீர்கள். இப்பணத்தை மேற்படி திணைக்களத்திற்கு கொடுத்தால் இச்சேவைகளை தொடர்ந்து நடத்தலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஈ)

### இறந்தவர் சூடுபட்டதும்

## வயிற்றைப் பொத்திப் பிடித்துக் கொண்டு 'ஐயோ' என்று கத்தினார்

### கம்பர்மலை கொலை வழக்கில் சாட்சியம்

[நமது புலோலி நிருபர் திருச்செல்வம்]

"நாங்கள் உழவு இயந்திரத்தில் சென்றுகொண்டிருக்க 1ம் எதிரி துவக்கை நீட்டி எங்களை நோக்கி சுட்டபோது சூடு தங்கலிங்கத்திற்குப் பட்டவே அவர் வயிற்றைப் பொத்திப் பிடித்துக்கொண்டு 'ஐயோ, ஐயோ' என்று கத்தினார். நான் உழவு இயந்திரத்தில் இறங்கிப்போகும்போது 1ம் எதிரி எனக்கு வைத்த வெடி எனக்குப் பிடிக்கவில்லை. 2ம் எதிரி எனக்கு வாளால்வெட்டினார்"

இவ்வாறு கம்பர்மலையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுக் கொலை வழக்கில் சாட்சியமளித்த உழவுயந்திரச் சாரதி இராசதுரை தேவராசா (வயது 22) சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் கம்பர்மலையைச் சேர்ந்த இராசதுரை தங்கலிங்கம் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நாராயணசாமி கருணேஸ்வரன் [கருணை], நாராயணசாமி அழகேஸ்வரன், கந்தையா நாராயணசாமி ஆகியோர்மீது குற்றஞ்சாட்டி வல்வெட்டித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டுவரும் இக்கொலைவழக்கில் தொடர்ந்து சாட்சியமளித்த தேவராசா குறிப்பிட்டதாவது!

எனக்கு இந்த எதிரிகளைத் தெரியும். 2ம் எதிரி 3ம் எதிரியின் மகன். 1980 கார்த்திகை 26ம் திகதி எனக்கு நல்லஞாபகமுண்டு. அன்று கருணேஸ்வரன், அழகேஸ்வரன், இலங்கேஸ்வரன் ஆகிய மூவரும் எனக்கு அடித்த காரணமாக நான் பொலிஸில் செய்த முறைப்பாட்டின்பேரில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திற்கு வரச்சொன்னபடியால் காலை 7, 8 மணிபோல் நானும் தங்கராசாவும், தங்கலிங்கமும் உழவு இயந்திரத்தில் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்தோம். உழவு இயந்திரத்திற்கும் சேதமேற்பட்டிருந்தபடியால் உழவு இயந்திரத்தையும் பொலிசார் கொண்டுவரும்படி கூறியபடியாலேயே நாங்கள் உழவு யந்திரத்தில் சென்றோம். நான் முன்னர்கூறிய கருணேஸ்வரன் அழகேஸ்வரன், இலங்கேஸ்வரன் ஆகிய மூவரும் சகோதரர்கள், இம்மூவரும் இவ்வழக்கின் 3ம் எதிரியான நாராயணசாமியின் பிள்ளைகள்.

தங்கலிங்கம் என்பவர் எனது சகோதரி இராசேஸ்வரியின் கணவன். நாங்கள் கம்பர்மலை ரோட்டால் பொலிஸ்நிலையத்தை நோக்கி செம்பாட்டுச் சந்திக்கு வந்ததும் 3ம் எதிரியான நாராயணசாமி கொட்டனுடன் நின்றதைக் கண்டோம்.

நாங்கள் அன்று எங்களுடைய வீட்டிலிருந்து பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபாதை தான் மிகக் குறுகியதூரத்தைக் கொண்ட பாதை. 3ம் எதிரி கொட்டனுடன் நிற்கும்போது 2ம் எதிரி அழகேஸ்வரன் வாளுடன் நின்றார். 1ம் எதிரி கருணேஸ்வரன் துவக்கு வைத்திருந்தார், நாங்கள் சென்றுகொண்டிருந்த உழவுயந்திரத்தை நானே செலுத்திக் கொண்டிருந்தேன்.

எனது வலப் பக்கத்தில் எனது மைத்துனர் தங்கலிங்கம் இருந்தார். இடது பக்கத்தில் எனது சகோதரன் தங்கராசா இருந்தார். அப்போது இவ்வழக்கின் 1-ம் எதிரியான கருணேஸ்வரன் துவக்கை நீட்டி எங்களை நோக்கி சுட்டார். அந்தச் சூடு மைத்துனர் தங்கலிங்கத்தைத் தாக்கியது சூடுபட்டதும். தங்கலிங்கம் தனது வயிற்றைப் பொத்திப்பிடித்துக்கொண்டு ஐயோ, ஐயோ என்று கத்தினார்.

நான் உடனே உழவு இயந்திரத்தைப் பின் நோக்கி எடுக்கவேண்டிய கியரை மாற்றியபோது உழவு இயந்திரம் பள்ளம் ஒன்றுக்குள் விழுந்துவிட்டது. சம்பவம் நடந்த இடத்தில் உழவு இயந்திரத்தைப் பின்னோக்கி எடுக்காமல் முன்னே வெட்டித் திருப்ப முடியாது. தங்கலிங்கம்எழுந்துவிட்டார்.

தங்கராசா உழவு இயந்திரத்தால் இறங்கி ஓடும்போது 2-ம் எதிரி அழகேஸ்வரன் அவருக்கு வாளால்வெட்டினார் 3-ம் எதிரி நாராயணசாமி கொட்டனால் அடித்தார். இறந்தவர் உட்பட எங்களில் யாரிடமும் எதுவித ஆயுதங்களும் இருக்கவில்லை.

நான் உழவு இயந்திரத்தால் இறங்கி ரோட்டில் ஏறும்போது 1-ம் எதிரி கருணேஸ்வரன் என்னை நோக்கி வெடி வைத்தார். அந்த வெடி எனக்குப் படவில்லை. 2-ம் எதிரி அழகேஸ்வரன் எனக்கு வாளால் வெட்டினார். அந்த வெட்டு எனது இடதுமுழங்கையின் பின் பக்கத்தைத் தாக்கியது.

நான் ஓடினேன். சிறிது தூரம் ஓடியபின் திரும்பிப் பார்த்தபோது தங்கலிங்கத்திற்கு அழகேஸ்வரன் வாளால் வெட்டியதையும், நாராயணசாமி கொட்டனால் அடிப்பதையும் கண்டேன். நான் வீட்டை நோக்கி ஓடிக்கொண்டிருந்தபோது அமிர்தலிங்கம் காரில் கொண்டுவந்து என்னை ஏற்றிக்கொண்டு மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்றார்.

அமிர்தலிங்கம் என்னைக் காரில் ஏற்றியபோது அந்தக் காருக்குள் எனது மைத்துனர் தங்கலிங்கம் இருந்ததைக் கண்டேன். அவருக்கு அறிவு இருக்கவில்லை. எனது சகோதரன் தங்கராசாவும் இருந்தார். அவருக்கும் அறிவு இருக்கவில்லை. மூவரையும் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோனார்கள் அங்கு எனக்கும், எனது சகோதரன் தங்கராசாவுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.

எங்களுடன் மந்திகை ஆஸ்பத்திரிக்கெடுத்துச் செல்லப்பட்ட சூடுபட்ட தங்கலிங்கத்தை யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டதாக நான் அறிந்தேன். பின்பு அவர் இறந்துவிட்டதாகவும் கேள்விப்பட்டேன். பின்பு பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தேன்.

## 7 வயது சிறுவன் கிணற்றுக்குப் பலி

(வேலணை)

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய சிறுவன் ஒருவன் குடிப்பதற்காக அயல்வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்றபோது தவறிவிழுந்து மரணமான பரிதாப சம்பவமொன்று வேலணை செட்டிபுலத்தில் நிகழ்ந்துள்ளது'

வெற்றிவேலு விஜயராசா (வயது 7) என்னும் சிறுவனே இறந்தவராவார். இவரின் மரணவிசாரணையை அல்லைப்பிட்டி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. வல்லிபுரநாதன் நடத்தினார். விசாரணையின் முடிவில் நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினார்.

வேலணை கிழக்கு கிராம சேவையாளர் திரு. சோ. சந்திரசேகரம் சாட்சியை நெறிப்படுத்தினார். ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இரு பொலிசாரும் விசாரணையின்போது சமுகமளித்திருந்தனர். (இ)

## உலக இந்து பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

(பச்சிலைப்பள்ளி)

கொழும்பில் 82ம் ஆண்டு ஜனவரியில் நடைபெறவிருக்கும் உலக இந்து மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிநாடுகளிலிருந்து வரும் பிரதிநிதிகள் யாழ் நகருக்கு வரும்போது சாவகச்சேரியில் வைத்து வரவேற்பளிக்க அறவழிப் போராட்டக்குழு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமாக அறவழிப் போராட்டக்குழு இந்து கலாசார அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## மலேஷிய துணை ஆயருக்கு சில்லாலையில் வரவேற்பு

[பண்டத்தரிப்பு]

"எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் வெளிநாடு ஒன்றில் துணை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு இறைபணியாற்றி வருவது எமக்கு மட்டுமல்ல இந்த நாட்டிற்கே பெருமையளிக்கக்கூடியதொரு விடயமாகும். மதக்கோட்பாடுகளுடன் ஒழுகிவரும் ஒருவருக்கு தேவ அழைத்தல் எந்த நேரத்திலும் கிடைக்கலாம்"

இவ்வாறு யாழ். ஆயர் அதி வந். கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை கோலாலம்பூர் துணை ஆயர் அதி வந். அன்ரனி செல்வநாயகம் ஆண்டகைக்கு அவரது சொந்த ஊரான சில்லாலையில் அளிக்கப்பட்ட வரவேற்புபசார விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சில்லாலை கத்தோலிக்க மக்கள் சார்பில் சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நடாத்தப்பட்ட இவ்வரவேற்பு விழா ஆரம்பத்தில் கோலாலம்பூர் துணை ஆயர், 52 குருமார்கள், 30 சங்கைக்குரிய சகோதரிகள் ஆகியோரால் பாண்டுவாத்திய சகிதம் ஆலயத்துக்கு அழைத்துவரப்பட்டார். அதனைத் தொடர்ந்து யாழ். ஆயர், கோலாலம்பூர் துணைஆயர் உட்பட நான்கு குருவர்களால் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சில்லாலை பங்குத்தந்தை அருட்திரு. ஜெபநேசன் வரவேற்புரை நிகழ்த்துகையில், "சில்லாலைப் பங்கைச்சேர்ந்த அதி வந். அன்ரனி செல்வநாயகம் ஆண்டகை கடல்கடந்த நாடு ஒன்றில் துணை ஆயராக சேவைசெய்வது எமக்குப்பெருமகிழ்ச்சியைத் தருகின்றது. இறைசேவைக்கு அவர் தம்மை அர்ப்பணித்திருப்பது இக்கிராமத்து ஏனைய இளைஞர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றது" என்றார்.

கோலாலம்பூர் துணை ஆயர் அதி வந். அன்ரனி செல்வநாயகம் ஆண்டகை பதிலுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டதாவது:-

மலேஷியாவில் இலங்கையைச் சேர்ந்த பலர் மதகுருமார்களாகவும் சங்கைக்குரிய சகோதரிகளாகவும்பணியாற்றி வருகின்றனர் ஆரம்பகாலத்தில் பிறநாட்டிலிருந்தே கிறிஸ்தவகுருமார் அங்குவந்து சமயப்பிரசங்கங்களில் ஈடுபட்டனர் மலேசியா அவர்களுக்கு அங்கு பிரஜா உரிமையும் வழங்கியது. தற்போது அரசு அவர்களின் வருகையைத் தடை செய்துள்ளது. உள்ளூரைச் சேர்ந்தவர்களே தற்போது அங்கு சமயப்பணிபுரிந்துவருகின்றனர். அங்கு வாழும் தமிழ்மக்கள் மத்தியில் சேவையாற்ற எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது

சில்லாலைப் பங்குச்சபையின் செயலாளர் டாக்டர் சுந்தரம் இன்னாசித்தம்பி சபையின் சார்பில் வாழ்த்துப்பத்திரத்தை வாசித்து வழங்கினார். (இ)

## கட்டுடையில் சிறுவர் பாடசாலை

(பண்டத்தரிப்பு)

கட்டுடைக் கிராம அபிவிருத்திச் சங்கம் கட்டுடையிலுள்ள மானிப்பாய் தொகுதிக்கான வீடமைப்புத்திட்டத்தைச் சேர்ந்த சிறுவர்களின் நலன்கருதி சிறுவர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துள்ளது. (ஈ)

தப்பி ஓடுவோம்!
விவசாயியின
கையில் பஸ்ஸா
LANKEM
LANKEM
Bassa 50°

கபிலநிற பயிர்த் தத்திகளையும் ஏனைய இலை, பயிர் தத்திகளையும் ஒழித்துக்கட்ட பஸ்ஸா முற்றிலும் சிறந்தது.

லங்கெம் வழங்கும் பஸ்ஸா

LANKEM

லங்கெம் சிலோன் லிமிட்டெட்
760, 762, பேஸ்லைன் வீதி,
கொழும்பு 9
தொலைபேசி: 98292 - 6

ஆகக்கூடிய சில்லறை விலை: 400 மி.லி. - ரூ. 66/-

Grant, K & E 3946

**வெலிங்டன்**
தினசரி 4 காட்சிகள்
GRAK HEART PASS

**லிடோ** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
[illegible] சோமாளியுடன்
இவளும் ஒரு பெண்

16-ந் திகதி முதல் 18-ந் திகதி வரை
**சாந்தி** (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30, 9-45.
ஜெய்சங்கர், சுஜாதா, ஸ்ரீபிரியா, ஸ்ரீகாந்த்
"நீ ஒரு மகாராணி" புதிய பிரதி

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-30, 9-45
பாக்கியராஜ்-அஸ்வினி-சங்கிலிமுருகன்
ஒரு கை ஓசை

வெற்றிகரமான 5-வது வாரம்
**ராஜா** (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
★ எம். ஜி. ஆர், ★ லதா
பல்லாண்டு வாழ்க
[ஈஸ்ட்மென் கலர்]

**ஸ்ரீதர்** (யாழ் நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
இந்த நூற்றாண்டின் ஒப்பற்ற திரைக்காவியம்
இசைப்பிரியர்களுக்கும் பரதநாட்டியப் பிரியர்களுக்கும் பெருவிருந்து!
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம்
(கலர்)
இது ஒரு கலைப்பொக்கிஷம்

**வெள்ளி** ([illegible])
தினசரி 2-30, 6-30
சிவாஜி- ஸ்ரீதேவி
கவரிமான்

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார் - சுஜாதா
மயங்குகிறாள் ஒரு மாது

5-வது வெற்றி வாரம்
**[illegible]** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-சுஜாதா
நூல் வேலி
(கலர்)

இன்று முதல் மகத்தான வெளியீடு
**ராணி** (யாழ்ப்பாணம்) எப்போ வருமென எதிர்பார்த்திருந்த ரசிகப் பெருமக்களுக்கு...
தினசரி நான்கு காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி
மற்றும் பலர் நடித்த
பாக்கியராஜின் கைவண்ணத்தில் உருவான மகத்தான வெற்றிச் சித்திரம்
சுவர் இல்லாத சித்திரங்கள்

**வின்ஸர்** இப்பொழுது ஹவுஸ் புல் காட்சிகளாக நடைபெறுகிறது
தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாசலூஜா
★ தேங்காய் ★ நம்பியார்
நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே
ஈஸ்ட்மென் கலர்]
ஒருவன் பணத்துக்கு ஆசைப்பட்டான்
ஒருத்தி ஆண் இனத்தை வெறுத்தாள்
ஒருவன் குடிக்கு அடிமையானான்
இவர்களின் முடிவு என்ன என்பதை
வெண் திரை விடை அளிக்கும்

## "சமய வாழ்வு வாழவேண்டும்"

(புலோலி)

தமிழினம் பேரின வாழ்க்கை வாழ்ந்து தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால் இன்று இக்கட்டான சூழ்நிலைக்கு உத்தள்ளப்பட்டுள்ளது. இது தமிழினத்தின் சாபக்கேடாகும். எனவே தமிழினம் இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கு சமயம் கூறும் உண்மை வாழ்க்கை வாழவேண்டும்.

இவ்வாறு சுவாமி சித்பவானந்தா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெற்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசையிலே கலந்து கொண்டு உரையாற்றியபோது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஆலயங்களைத் தூய்மையுடையனவாக வைத்திருக்க வேண்டும். ஆலயங்களில் சினிமாப்பாடல்கள் ஒலிபரப்பப்படுவது தடைசெய்யப்பட வேண்டும்.

சுந்தரமூர்த்தி நாயனார் போன்ற சமயத் தலைவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கையை நாமும் பின்பற்றி உண்மை வாழ்க்கை வாழ்ந்து பேரின்பப் பேற்றை அடைய வேண்டும்.

## திறந்துவிடப்படாத கோவில்களை சகல மக்களுக்கும் திறந்து விடுக!

### திருவள்ளுவர் மகாசபை தீர்மானம்

[அரியாலை]

வடபகுதியில் இதுவரை சகலமக்களினதும் வழிபாட்டுக்காகத் திறந்துவிடப்படாமல் இருக்கும் சகல ஆலயங்களையும் எல்லா மக்களினதும் வழிபாட்டுக்காகத் திறந்துவிட நடவடிக்கை எடுக்கும்படி இந்துசமய கலாசார பிரதேச அமைச்சரையும், அரசாங்கத்தையும் வடபிரதேச மாவட்ட அபிவிருத்திச் சபைகளையும், ஆலய தர்மகர்த்தாக்களையும் கோரும் தீர்மானம் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 31வது வருடாந்த மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மீசாலையில் அமரர் யோகபோஷ அரங்கில் நடைபெற்ற மகாநாட்டிற்கு மகாசபைத் தலைவர் திரு. க. இருஷ்ணராசா தலைமை வகித்தார். மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் சிறுபான்மைத் தமிழ்மக்களினதும், அவர்களது இயக்கங்களினதும் ஆதரவுடன் அமைக்கப்பட்டிருக்கும் பெரும்பான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியை மேலும் வலுப்படுத்தி அதன்மூலம் நாம் வென்றெடுத்த உரிமைகளைப் பாதுகாக்கவும், இழந்த உரிமைகளை வென்றெடுக்கவும் சகல ஒடுக்கப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களையும், அவர்களின் சகல இயக்கங்களையும் இம்மாநாடு கோருகிறது.

"நெசவுத் தொழிலை மேற்கொண்டிருக்கும் மக்களின் தொழில் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் அவர்கள் வசிக்கும் சொந்தப் பிரதேசங்களில் சுலபமான முறையில் [illegible] வேறு சேதி செய்து கொடுக்கவேண்டுமென்று கைத்தொழில் அமைச்சரைக் கோருகிறது"

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் குடியிருக்கும் விவசாயம் செய்யும் அவர்களுக்குச் சொந்தமற்ற தனியார் நிலங்களைச் சுவீகரித்து அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், அவர்கள் வாழும் பகுதிகளிலுள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான முடிக்குரிய காணிகளை பகிர்ந்து செய்து அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையையும், காணி அமைச்சரையும் கோருகிறது"

"மகாசபையின் வேண்டுகோளை ஏற்று மகாசபை சமர்ப்பித்த பட்டியலிலிருந்து சுமார் 10 பேருக்கு மின்சாரப் பகுதியிலும், புகையிரதப் பகுதியிலும் அரசாங்க நியமனம் வழங்க ஏற்பாடு செய்த முன்னாள் யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திர துரைசுவாமி அவர்களுக்கு மகாசபை நன்றி தெரிவிக்கிறது. இன்னும் வரும் காலத்திலும் எமது மக்களுக்கு பல துறைகளிலும் அரசாங்க நியமனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவரையும் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைச் செயலாளரையும் மாவட்ட அமைச்சரையும் இம்மாநாடு கோருகிறது"

ஆகிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

## கண்ணாடித் தொழிற்சாலை வேண்டும்

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் கண்ணாடி தயாரிப்பதற்கான மணல் நிறையக் காணப்படுவதால் மன்னார் பகுதியில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு கோரும் தீர்மானமொன்றை மன்னார் மாவட்ட மக்கள் பிரதேச அபிவிருத்தியமைச்சர் திரு. செ. இராசதுரைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

## 'தர்மம், அஹிம்சை இரண்டும் இரண்டறக் கலந்தவை'

### மடுத்திருப்பதியில் பிரதமர் பிரேமா

[மன்னார்]

"தர்மம், அஹிம்சை இரண்டும் இரண்டறக்கலந்தவை இவை சாதி, இனமத பேதங்களுக்கு அப்பாற்பட்டவை. உலகத்தில் தர்மம் எப்போதும் நிலைக்கவும், கைக்கொள்ளப்படவுமே, இயேசுநாதரைப் போன்ற அவதாரபுருஷர்கள் அவதரித்து மானிடவர்க்கத்திற்கு ஒருசில உதாரணங்களைத் தந்து மறைந்தார்கள்"

இவ்வாறு பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாஸா, மன்னார் புதிய மறைமாவட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டபின்பு மடுத்திருப்பதியில் இடம்பெற்ற வருடாந்த ஆவணி மாத திருவிழாநிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

சுமார் ஒருலட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்களுக்கு மத்தியில் உரைநிகழ்த்திய பிரதமர் பிரேமா, கணிசமானளவு யாத்திரிகர்கள் கூடும் இடமான இந்த தலத்திலே, ஒருசில சுகாதார வசதியீனங்களும், போக்குவரத்துச் சேவைகளும் குறைபாடு தான் நன்கறிவதாயும், இவற்றை அடுத்த ஆண்டு உற்சவத்திற்கு முன் சீர்திருத்துவதாகவும் உறுதியளித்தார்.

தான் பௌத்தமதத்தைச் சார்ந்திருந்தபோதிலும், தனது மாணவப் பருவத்தில் கொழும்பு, புனிதஜோசப் கல்லூரியில் கல்வி கற்கும் போது கல்வி பெற்ற கத்தோலிக்கமதபோதனைகள், மற்றும் ஏனைய மதங்களைச் சார்ந்த மாணவர்களது சகவாழ்வு என்பன மதங்கள் புகட்டும் உயரிய போதனைகளை விளங்கிக்கொள்ள பெருதவியாக இருந்ததெனவும் நினைவு கூர்ந்தார்.

## நாகநாதன் நினைவுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

அமரர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் நினைவுதினத்தையொட்டி இன்று [illegible] வீதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர்க் கிளைக் காரியாலய முன்றலில் அஞ்சலிக்கூட்டம் ஒன்று மாலை 7 மணிக்கு நடைபெறும்.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் எம். பி. தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. நினைவுரை நிகழ்த்துவார். யாழ். எம்.பி. திரு. வே. யோகேஸ்வரன் உட்பட வேறு பல கூட்டணி எம். பிக்களும் பிரமுகர்களும் கலந்துகொள்வர்.

யாழ். நகரில்
கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2"
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்
பெறுவதற்கு நாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2 மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

# கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் யாழ் விஜயம்

[உடுப்பிட்டி]

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எம். பீ. சீ. சில்வா இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறார். நாளை வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கருத்தரங்கில் கலந்துகொள்ளும்முகமாகவே அவர் இங்கு வருகைதருகிறார்.

இன்று யாழ். கல்வித் திணைக்களத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு கே. செவநாதன் தலைமையில் நடைபெறும் யாழ். கல்வி அதிகாரிகள், ஊழியர்களுக்கான விசேட கருத்தரங்கிலும், மாலை வசாவிளானில் நடைபெறும் கலைவிழாவிலும் மேலதிகச் செயலாளர் திரு. சில்வா கலந்துகொள்வார்.

இலங்கை ஓட்டுப்பலகை
கூட்டுத்தாபனம், தங்களது
விற்பனை முகவர்களாக
எம்மை நியமனம் செய்துள்ளது.
உங்களுக்குத் தேவையான
சிப்போட், பிளைவூட்
வகைகளுக்கும்
கதவுகளுக்கும்
ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்
19, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 508

### ஜி.சி. ஈ. பரீட்சை வினா - விடைத்தாள் விநியோகம்

# புதிய நடைமுறைகள் குறித்து ஆசிரியர் சங்கம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் ஜி. சி. ஈ பரீட்சை வினா-விடைத்தாள்கள் விநியோகம் சம்பந்தமாக, பரீட்சை ஆணையாளராலும் யாழ். கல்வித்திணைக்களத்தாலும் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய நடைமுறைகளைக்கண்டித்து, தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

இம்முறை பரீட்சை மேற்பார்வையாளர்கள் மேற்கொண்ட வேலைகள் டிசம்பர் மாதத்துக்கும் கடைப்பிடிக்கப்படுமானால், பரீட்சை மேற்பார்வையாளர் வேலைகளை அதிபர்கள் ஆசிரியர்கள் பொறுப்பேற்கமாட்டார்கள் என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பொதுச்செயலாளர், பரீட்சை ஆணையாளரும், யாழ். கல்விப்பணிப்பாளரும், இராணுவ, பொலிஸ் அதிகாரிகளையே பரீட்சை மேற்பார்வையாளர்களாக நியமித்துப் பரீட்சையை நடாத்தவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது:

பரீட்சை மேற்பார்வையாளர்களாகக் கடமையாற்றும் குறிப்பாக ஆசிரியைகள்கூட ராணுவமுகாமுக்கும், பொலிஸ் நிலையத்துக்கும் சென்று வினாத்தாள் பொதிகள் எடுத்தும், விடைத்தாள் பொதிகள் கொடுத்தும் வருகிறார்கள்.

பரீட்சை ஆணையாளரினதும் யாழ் கல்வித் திணைக்களத்தினதும் இக்கடைசிநேர மாற்று நடவடிக்கை அதிபர்களையும், ஆசிரியர்களையும் பெரும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

இம் மாற்று நடவடிக்கைகள் குறித்து ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளைக் கலந்தாலோசிக்காததும் வருத்தத்துக்குரியது.

இதுவரை காலமும் வினா-விடைத்தாள்கள் சேகரித்து வைத்த நிலையங்களில் எவ்வித பிரச்சினைகளும் நடைபெறவில்லை நெல்லியடி மகாவித்தியாலயத்தில் மாத்திரம் ஒரு அசம்பாவிதம் நடைபெற்றது. இதுசம்பந்தமாக யாரும் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படுத்தாதிருக்க ஏன் இந்த மாற்று நடவடிக்கை என்பது தெரியவில்லை [மா]

## இன்று

[புலோலி]

தென்புலோலி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் விளையாட்டுப் போட்டி தோட்டத்து வைரவர் கோயிலுக்கு அருகாமையிலுள்ள விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறும் என செயலாளர் செல்வி வேணுகோபால் கிருஷ்ணவேணி தெரிவித்துள்ளார்.

## கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை அஞ்சல் தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் நான்காவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். அஞ்சல் அலுவலர் இளைப்பாற்று மண்டபத்தில் நடைபெற உள்ளது.

## கூட்டுறவு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணம், பரந்தன் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த கூட்டுறவு உதவி ஆணையாளர்களும் கலந்து கொள்வார்கள். இவ்விழாவில் விளையாட்டுப் போட்டிகளும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

இவ்விழாவுக்கான ஒழுங்குகளை முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு திணைக்கள கல்வி விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. பொ. சிவஞானசுந்தரம் மேற்கொண்டுள்ளார்.

## வயலில் ஆண்சிசுவின் சடலம்

[யாழ்ப்பாணம்]

அழகான ஆண்சிசுவின் சடலம் ஒன்று கொக்குவிலிலுள்ள 3ம் கட்டை வாய்க்காலில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நந்தாவில் [illegible] உள்ள வாய்க்காலின் ஓரத்தில் இச்சிசுவின் சடலம், வெள்ளைத் துண்டு ஒன்றினால் சுற்றப்பட்டு துணிப்பையொன்றினுள் வைக்கப்பட்டிருந்தது.

பிரசவித்த சிலமணி நேரத்தில் இச்சிசு வயலில் கொண்டுவந்து போடப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. [illegible] -இ]

## மடுவில் பிரதமருக்கு மகத்தான வரவேற்பு

[மன்னார்]

பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா மடுமாதா உற்சவத்தில் கலந்துகொள்ள வருகைதந்தபொழுது அவருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரதமர் உற்சவத்தின் பிரதான நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார். கொழும்பு, மன்னார், யாழ்ப்பாணம் ஆயர்கள், குருமார்கள், மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், மன்னார் எம். பி., மாவட்ட அமைச்சர் மற்றும் ஏராளமான பிரமுகர்கள் பிரதமரை வரவேற்றனர்.

சிங்களம், தமிழ், ஆகிய மொழிகளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. சுமார் 2 லட்சம் மக்கள் குழுமியிருந்தனர்.

மடுக்கோயிலுக்கு பிரதமர் பொன்னிறத்திலான குத்துவிளக்கொன்றை அன்பளிப்புச் செய்தார்.

## நிருபருக்கு பயமுறுத்தல்

[மன்னார்]

'ஈழநாடு' மன்னார் நிருபர் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் ஒருவரால் பயமுறுத்தப்பட்டுள்ளார்.

பிரதமமந்திரி பிரேமதாசாவின் மன்னார் விஜயம் தொடர்பான செய்திகளை சேகரிக்க முற்பட்டபோதே அவர் பயமுறுத்தப்பட்டார். இது பற்றி மாவட்ட அமைச்சரிடம் அவர் புகார் செய்துள்ளார்

## யாழ்.மாவட்ட

[1ம் பக்கத்தொடர்ச்சி]

தெருவோரங்களிலும், சந்திகளிலும் கூட்டமாக நின்று வீண் அரட்டை அடித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கை ஒரு தலையிடியைக் கொடுத்துள்ளது.

மானிப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த கிராமங்களிலுள்ள வீடுகள் பலத்தசோதனைவிடப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயவளவில் இராணுவ கவசவண்டிகள் இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ளன. [மா]

## இராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தின் சகலபிரிவுகளையும் சேர்ந்த தொண்டர்களையும் உடன் வருமாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டெனிஸ் பெரேரா அழைப்பு விடுத்துள்ளார். [இ]

## திருமலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பற்றி அமெரிக்காவிலும், அமெரிக்காவைப் பற்றி இலங்கையிலும் ஆதாரமற்ற கற்பனைக்கதைகள் கூறப்பட்டு வருவதாகவும் இதனைத் தவிர்க்க வேண்டியது இருநாட்டினதும் கடமை என்றும் கூறினர்.

### ஜெயவர்த்தன வேண்டுகோள்

இலங்கைபற்றி அமெரிக்கா கொண்டுள்ள தப்பெண்ணங்களையும் கற்பனைகளையும் போக்க இலங்கையில் உள்ள அமெரிக்கத்தூதுவர் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தன கேட்டுக்கொண்டார்.

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பமணி குணரெட்னம்

உரும்பராயைச் சேர்ந்த முன்னாள் தபாலதிபர் குணரட்னத்தின் அருமை மனைவி புஸ்பமணி காலமானார். இவர், கவீனித்தா, வினித்தா, ஆகியோரின் தாயாரும், சுகிர்தமலர் நல்லையா, மனோன்மணி சைமன் இராசையா, சற்குணமணி செல்வரட்னம், ஜெயமலர் ஜீவநாயகம், காலஞ்சென்றபூபாலசிங்கம், காலஞ்சென்ற ஜெயரட்ணம் ஆகியோரின் சகோதரியும், கிருபானந்தராஜாவின் மாமியுமாவார். அன்னாரது பிரேத சேமஆராதனை, இன்று ஞாயிற்றுக்கிழமை [16-08-81] மாலை 3-30 மணிக்கு உரும்பராய், தெற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல், கோப்பாய் சென். மேரிஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 0649

## மரண அறிவித்தல்

### திரு. கா. த. முத்தையா

[ஓய்வுபெற்ற மாவட்ட சிரேஷ்ட சுகாதார பரிசோதகர்]

ஓய்வு பெற்ற மாவட்ட சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் திரு கா. த. முத்தையா அவர்கள் இறைவனடி எய்தினார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-08-81 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 3 மணியளவில் பலாலி தெற்கு, வயாவிளான் குடும்ப மைதானத்தில் நடைபெறும்.

இவர் திருமதி கனகரத்தினத்தின் அன்புக்கணவரும், கருணாகரன் [வவுனியா-பெருந்தெருக்கள் திணைக்களம்], இரவீந்திரன் [பொறியியலாளர்-சுவிட்சர்லாந்து], சாந்தகுமார், திருமதி க. விமலாதேவி, திருமதி உ. சுசிலாதேவி, செல்வி ரோகிணிதேவி [மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை-பருத்தித்துறை], ஆகியோரின் தகப்பனாரும், இ. தம்பிராசா [பொறியியலாளர்- பெருந்தெருக்கள் திணைக்களம்-மன்னார்-மாவட்டம்], கு உதயகுமாரன் [தொழில்நுட்ப உத்தியோகத்தர்- தேசிய வீடமைப்பு திணைக்களம் - அநுராதபுரம்]. திருமதி க. மாலினி திருமதி இ. லொட்டி ஆகியோரின் மாமனாரும், திருமதி கா. த. சின்னத்தம்பி [ஓய்வு பெற்ற ஆசிரியர்]யின் அன்புச் சகோதரரும், திருமதி சி. இராசரத்தினத்தின் மைத்துனரும் ஆவார்.

உற்றார் உறவினர் தயவு செய்து இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

0647

மனைவி, மக்கள், மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா இராசரத்தினம்

(நில அளவையாளர்)

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் [நில அளவையாளர்] சவூதி அரேபியாவில் காலமானார். இவர் ஜெயலட்சுமியின் [நேசம்] அன்புக்கணவரும், மீனா [யாழ்ப்பாணக்கல்லூரி], சேந்தன், தயாளன் [வட்டு. இந்துக்கல்லூரி] ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற N. V. கந்தையா [மலேயன் பென்சனர்], திருமதி இராசம்மா கந்தையா ஆகியோரின் மகனும், காலஞ்சென்ற K. சதாசிவம் [ஓவசியர்], திருமதி தனலட்சுமிஅம்மா சதாசிவம் ஆகியோரின் மருமகனும், Major K இரத்தினம் [நிறைவேற்றுப்பொறியியலாளர், பெருந்தெருக்கள் அமைச்சு, கொழும்பு], சட்டத்தரணி க. குணரத்தினம் [J. P. U. M. பதில் நீதிபதி மல்லாகம்], K. நவரத்தினம் [யாழ். ரெக்ஸ் இன்டஸ்றீஸ் சித்தங்கேணி] ஆகியோரின் சகோதரரும், Dr. S பசுபதிராஜா [U K], S. தர்மலிங்கம் [கணக்காளர் பெருந்தெருக்கள் அமைச்சு அநுராதபுரம்] S. செல்வராஜா [Cement Corporation Nigeria], திருமதிகள் கமலாம்பிகை குணரத்தினம், கனகமணி கணேசானந்தன், வசந்தா தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின் அறிவிக்கப்படும். 0648

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலா நிலைய அச்சகத்தில் 1981 [illegible] ஆகஸ்ட் 16-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.